2018 மார்ச் 19]

6. அறிக்கைகள் அளித்தல்

அரசு உறுதிமொழிக் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *குழுக்களின் அறிக்கைகள் அளித்தல். அரசு உறுதிமொழிக் குழுவின் அறிக்கைகள் அளித்தல். மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. ராஜா, அரசு உறுதிமொழிக் குழுவின் தலைவர் அவர்கள்.* (குறுக்கீடுகள்)

திரு. சி. ராஜா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அவர்களை வணங்குகிறேன்.* (குறுக்கீடுகள்)

(திரு. *எம். தமிமுன் அன்சாரி,* திரு. *சே. கருணாஸ்,* திரு. *உ. தனியரசு மற்றும்* திரு. *கே.ஏ.எம். முஹம்மது அபூபக்கர் ஆகியோர் எழுந்து நின்று பேச முயன்றனர்.*)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அவையெல்லாம் எனது ஆய்வில் இருக்கின்றன, உட்காருங்கள்.* (குறுக்கீடு) *வாய்ப்பு இல்லை. இன்று காலையில்தான் வந்து கொடுத்திருக்கிறீர்கள். அது குறித்து நான் ஆய்வு செய்கிறேன். நீங்கள் உட்காருங்கள்.* (குறுக்கீடு) *நீங்கள் பேசுவதெல்லாம் ரெக்கார்டு ஆகாது. அவையெல்லாம் பதிவாகாது. காலையில் நீங்கள் 9–50 மணிக்கு என்னிடத்தில் கொடுத்திருக்கிறீர்கள். அரசுக்கு அனுப்பியிருக்கிறேன். பதில் வந்தால் நான் எடுத்துக்கொள்கிறேன். நீங்கள் உட்காருங்கள்.* (குறுக்கீடு) *அதற்கு என்ன செய்வது? இப்பொழுதுதானே என்னிடம் வந்து கொண்டுவந்து கொடுத்திருக்கிறீர்கள்? அரசிடமிருந்து எனக்கு பதில் வர வேண்டும் இல்லையா? அரசிடமிருந்து எனக்கு பதில் வரட்டும்.* (குறுக்கீடு) திரு. *தமிமுன் அன்சாரி, நீங்கள் இன்று காலையில் 10–30 மணிக்குக் கொடுத்திருக்கிறீர்கள். அதனை அரசுக்கு அனுப்பியிருக்கிறேன். பதில் வந்தால் நான் எடுத்துக்கொள்கிறேன். நீங்கள் உட்காருங்கள்.*

(*உறுப்பினர்* திரு. *தமிமுன் அன்சாரி அவர்கள் அவையிலிருந்து வெளியேறினார்.*)

திரு. சி. ராஜா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அவர்களை வணங்குகிறேன். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கு வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு அம்மா அவர்களின் அரசை சிறப்பாக வழிநடத்தி வரும் எனது அரசியல் ஆசான்*

[திரு. சி. ராஜா] [2018 மார்ச் 19

மாண்புமிகு தமிழ்நாடு முதல்வர் அவர்களை வணங்குகிறேன். மாண்புமிகு துணை முதல்வர் அவர்களையும் வணங்குகிறேன்.

(திரு. சே. கருணாஸ், திரு. உ. தனியரசு மற்றும் திரு. கே.ஏ.எம். முஹம்மது அபூபக்கர் ஆகியோர் அவையிலிருந்து வெளியேறினர்.)

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் 2016–2018 ஆம் ஆண்டுகளுக்கான அரசு உறுதிமொழிக் குழுவின் மூன்றாவது மற்றும் நான்காவது அறிக்கைகளை குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கின்றேன். வணக்கம். (குறுக்கீடு)

4. தகவல் கோரல்—*தொடர்ச்சி*

(ஆ) எண்ணிக்கை அடிப்படையில் எதிர்க்கட்சி உறுப்பினர்களுக்கு சட்டமன்றத்தில் பேச வாய்ப்பு வழங்கக் கோருதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள், சொல்லுங்கள்.*

திரு. மு.க. ஸ்டாலின்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்று நிதிநிலை அறிக்கையின் மீதான பொது விவாதத்திலே பங்கேற்று உரையாற்றவிருக்கிறவர்களுடைய பட்டியலை நான் பார்த்தேன். அதிலே ஆளுங்கட்சியாக இருக்கக்கூடிய அ.தி.மு.க–விற்கு 3 உறுப்பினர்களுக்கும், எதிர்க்கட்சியாக இருக்கக்கூடிய திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு 2 உறுப்பினர்களுக்கும் பேசுவதற்கு நீங்கள் அனுமதி தந்திருக்கிறீர்கள். நான் கேட்க விரும்புவது என்னவென்றால், ஆளுங்கட்சியாக இருக்கக்கூடிய அ.தி.மு.க.–வைப் பொறுத்தவரையில், அமைச்சர்களின் எண்ணிக்கையைக் கழித்து, 77 பேர் சட்டமன்ற உறுப்பினர்கள். எதிர்க்கட்சியாக இருக்கக்கூடிய திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்த சட்டமன்ற உறுப்பினர்கள் 89 பேர். (மேசையைத் தட்டும் ஒலி) இந்தக் கணக்கை ஏற்கெனவே இதே அவையில் நடந்து முடிந்த ஆளுநர் உரையின்மீது நடைபெற்ற விவாதத்திலே, அப்போது நடைபெற்ற அலுவல் ஆய்வுக் குழுக் கூட்டத்திலே நாங்கள் தங்களிடத்தில் இந்தக் கருத்தை எடுத்துச் சொன்ன நேரத்தில், ஆளுங்கட்சி சார்பாக 2 உறுப்பினர்களுக்கும், எதிர்க்கட்சி சார்பாக 2 உறுப்பினர்களுக்கும் வாய்ப்பு வழங்க நீங்கள் சம்மதம் தந்து, அந்த அடிப்படையில்தான் கவர்னர் உரைமீது விவாதம் நடந்து முடிந்திருக்கிறது. ஆனால், இப்போது